# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1872/31 - 2014 ජූලි මස 24 වැනි බ්‍රහස්පතින්දා- 2014.07.24

*1872/31 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**தேயிலை வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில்**

*தேயிலை வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால், (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத் தீர்மானங்கள் 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள்,
அமைச்சு.

தொழில் செயலகம்,
கொழும்பு 05,
*2014, யூலை 11.*

**அட்டவணை**

*1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதிய 9441 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளனவும் காலத்திற்குக்காலம் மாற்றப்பட்டனவும், 2003 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதிய 1290/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ள தேயிலை வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையின் தீர்மானங்களின் பாகம் II ஆனது பின்வரும் புதிய பாகத்தை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படும்.*

***பாகம் II***

**நாளாந்த நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்:**

*வேலையாள் - ரூபா 405.00*

*8- 406/1*

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### கறுவாத் தொழிலுக்கான சம்பளச் சபை

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் கறுவாத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, இவ்வறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ளவாறான தீரமானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சரவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள், 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள்,
அமைச்சு.

தொழில் செயலகம்,
கொழும்பு 05,
2014, யூலை 21.

### அட்டவணை

கறுவாத் தொழிலுக்கான சம்பளச் பையினால் ஆக்கப்பட்டவையும், 1959, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிய 11732 ஆம் இலக்க இலங்கை அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில், ஏற்கனவேயுள்ள பாகத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தை இடுவதன் மூலம், மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

### பாகம் II

I ஆம் நிரலிற் குறிப்பிடப்பட்டுள்ள வேலையாளருக்கு இயைபுடைய நேரவேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதம் II ஆம் நிரலில் அவ்வேலையாளருக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள வீதமாகும்.

| நிரல் I<br>விபரம் | நிரல் II<br>ஆகக் குறைந்த சம்பள வீதம்<br>ரூ. ச. |
|---|---|
| **நேர வீதங்கள் - ஒரு நாளைக்கு :** | |
| கிளைகள் வெட்டுதல், காண் வெட்டுதல், படி கட்டுதல், களைபிடுங்குதல், இலுக்குப்புல்லை அகற்றுதல், எல்லைகளை துப்பரவு செய்தல் | |
| வேலையாட்களுக்கு | 420.00 |
| **கறுவா உரித்தல் - ஒரு நாளைக்கு:** | |
| வேலையாட்களுக்கு | 450.00 |
| **துண்டு வீதம் :** | |
| கிளை வெட்டுதல் - ஒரு ஹெக்டயருக்கு | 9,500.00 |
| காண் வெட்டுதல் - 18" X 18" கொண்ட 10 மீட்டர் காணுக்கு | 180.00 |
| வருடாந்தம் களை பிடுங்குதல் - ஒரு ஹெக்டயருக்கு | 8,500.00 |

8- 406/2

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**சுத்திகரிப்புச் சேவைத் தொழில்**

சுத்திகரிப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால், (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளனவுமான தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள், 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள்,
அமைச்சு.

தொழில் செயலகம்,
கொழும்பு 05,
2014, யூலை 11.

### அட்டவணை

1993 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதிய 774/5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்கு காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும் 2010 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 1656/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ள சுத்திகரிப்பு சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையின் தீர்மானங்கள் பின்வரும் பாகங்களை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படும்.

### பகுதி (ஆ)

**மேலதிக நேர வீதம்**

சாதாரண வேலை நாளிற்கு மேலதிகமாக வேலை செய்யும் ஒவ்வொரு வேலை மணித்தியாலத்திற்குமான ஆகக் குறைந்த மேலதிக நேர வீதமானது நாளாந்த ஆகக் குறைந்த நேர வீதத்தை 8 ஆல் பிரித்ததன் ஒன்றரை மடங்காக அமையும்.

8- 406/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.